1992 எப்ரல் 28]

டாக்டர் அ. ஸ்ரீதரன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தொடக்கப் பள்ளி முதல் பள்ளி இறுதி வரை தொழில் கல்வி பயில வேண்டுமென்று ஒரு நிலை இங்கிலாந்து நாட்டிலே இருப்பதைப் போல, அதாவது 'த்ரீ டையர் சிஸ்டம்' போல தொழில் கல்வியையும் சேர்த்து பள்ளிகளில் பயில்வதற்கு அரசாங்கம் புதிய முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தமட்டில் முயற்சி எடுப்பதில் எந்தக் குறையையும் நாங்கள் வைக்கவில்லை. அதற்கேற்ற ஒரு ஒத்துழைப்புதான் ஆசிரியப் பெருமக்களிடத்தி லிருந்தும், பொதுமக்களிடத்திலிருந்தும் நாம் எதிர்பார்க் கிறோம். பொதுவாக ஒன்றாவது வகுப்பில் சேர்க்கிறபோது பெரும்பாலான பெற்றோர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் தங்களுடைய மகன் இன்ஜினியராக, அல்லது டாக்டராக வரவேண்டுமென்றுதான் நினைக்கிறார்களே தவிர, அப்படி வர முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறபோது ஏதாவது ஒரு தொழில் கல்வி கற்றுக்கொண்டு வாழ்க்கையில் சுதந்திரமாக வாழ்கிற சக்தியை அவர்கள் பெறவேண்டும் என்று பெற்றோர்கள் நினைப்பதில்லை. அவர்கள் ஒரு இறுதி நோக்கத்தை வைத்துக் கொண்டு, அதற்கு உரிய தகுதி தன்னுடைய குழந்தைக்கு இருக் கிறதா, இல்லையா என்பதைப்பற்றிக் கூட கவலைப் படாமல் அந்தப் படிப்பினை அந்தக் குழந்தைக்குத் தர முயற்சிக்கிறார்கள். அதன் காரணமாக 7-வதிலே நிற்கின்ற வர்கள், 8-வதிலே நிற்கின்றவர்கள, 10-வதோடு நின்று விடுகின்றவர்கள், 12 வதோடு நின்று விடுகின்றவர்கள் என்ற அளவிற்கு 'டிராப் அவுட்ஸ்' எண்ணிக்கை அதிகமாக இருந்து வருகிறது.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண். 651, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

651—

இந்திய மருத்துவச் சங்கத்தின் மூலம் மருத்துவக் கல்லூரி ஆரம்பித்தல்

*3369— டாக்டர் எஸ். சுந்தரராஜ்; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இந்திய மருத்துவச் சங்கத்தின் மூலம் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க அரசுக்கு விண்ணப்பங்கள் வந்துள்ளதா?

(ஆ) அரசு அதன் மீது எடுத்துள்ள முடிவு என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கும் போது கோயம்புத்தூர், சிதம்பரம், பெருந்துறை ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இந்திய மருத்துவச் சங்கத்தின் மூலம் மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதற்காக தினசரி பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டு ஒவ்வொரு அல்லோபதி மருத்துவருக்கும் இந்திய மருத்துவச் சங்கம் அதைப் பற்றி விவரம் அனுப்பியது. இப்போது அரசு தனியார் மருத்துக் கல்லூரிகளை ஆரம்பிப்பது இல்லை என்று முடிவு செய்துள்ளது. தனியார் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கும்போது இந்திய மருத்துவச் சங்கத்திற்கு முன்னுரிமை கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருக்கு மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதற்கான அனுமதி கொடுப்பதில்லை என்ற ஒரு கொள்கை முடிவை அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்துள்ளது. இப்போது அநேகமாக அதற்கான பதிலைச் சொல்லுவதற்கான வாய்ப்பில்லை என்று கருதுகிறேன். அது பற்றி ஆலோசிக்கும்போது கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். இப்போது அதைப்பற்றி ஆலோசிப்பதற்கான வாய்ப்பே இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்ற இடங்களில் தான் மக்களுக்கு நவீன மருத்துவ வசதி கிடைக்கிறது. ஆகவே, புதிய மருத்துவக் கல்லூரிகள் அரசு சார்பிலே அல்லது தனியார் துறையிலே ஆரம்பிக்கும்போது பின் தங்கிய பகுதிகளில் மருத்துவக் கல்லூரிகள் இல்லாத பகுதிகளில் ஆரம்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்ற இடத்திலேதான் நவீன மருத்துவ வசதி கிடைக்கிறது என்பதை முழுமையாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அங்கே கொஞ்சம் கூடுதலாக வசதி இருக்கலாம். ஆனால் மாவட்ட தலைநகரங்களிலே தேவையான வசதிகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை புரட்சித் தலைவியினுடைய அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இன்னும் அதே போல தாலுக்கா மருத்துவ

மனைகளையும் வலுவாக்க வேண்டும் என்ற நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே எங்கெங்கே மருத்துவக் கல்லூரி வருகிறதோ அங்கே தான் மருத்துவ வசதி கிடைக்கும் என்ற கொள்கையை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. சோ. பாலகிருஷ்ணன்.

<u>திரு. சோ. பாலகிருஷ்ணன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் மத்திய சுகாதார அமைச்சர் திரு. பொட்டேதார் அவர்கள் கோவையில் பேசுகின்றபோது மருத்துவக் கல்லூரிகள் அரசுத் துறையில் ஆரம்பிக்க ஒரு சூழ்நிலையில் தனியார்கள் ஆரம்பிப்பதற்கு நாங்கள் அனுமதி கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்களே அது நம்முடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் பத்திரிகையிலே பார்த்தேன். ஆனால் தமிழகத்திலே இருக்கின்ற நிலையை ஏற்கெனவே எவ்வளவு இடங்கள் இருக்கின்றன; எவ்வளவு கல்லூரிகள் இருக்கின்றன என்பதையெல்லாம் பார்த்து அவசியம் ஏற்பட்டால் அரசாங்கத்திலே ஆரம்பிக்கப்படும். ஆனால் அவசியம் இல்லாத நேரத்தில் அதைப் பற்றி யோசிக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் பத்திரிகையிலே அதைப் பற்றிப் பார்த்தேன். எந்தச் சூழ்நிலையிலே அவர் சொல்லியிருக்கிறார் என்று எல்லாம் அரசாங்கத்திற்கு எந்தவிதமான தாக்கீதும் முறையாக அரசுப்படி வரவில்லை. எனவே, அவர்கள் சொல்லியதை பத்திரிகையிலே பார்த்த பின்னாலேயே அதை வைத்துக் கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது, இதை வைத்துக்கொண்டு எந்த ஒரு முடிவுக்கும் வந்துவிட முடியாது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : டாக்டர் மு. சீனியம்மாள்.

<u>டாக்டர் மு. சீனியம்மாள்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பொறியியல் மற்றும் இன்ஜினியரிங் மாணவர்களுக்காக தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறும் வகையிலே இன்ஜினியரிங் கல்லூரி அமைத்து இருப்பதைப் போல பிராக்டீஸ் இல்லாத ஏழை மருத்துவர்கள் பிரைவேட் பிராக்டீஸ் செய்யும் மருத்துவர்கள் குழந்தைகள் பயன்பெறும் பொருட்டு அவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் முறையிலே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மருத்துவக் கல்லூரியை அமைத்து அந்த ஏழை மருத்துவர்களுக்கு உதவி செய்வதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்களிலே யார் யாருக்கு பிராக்டீஸ் இல்லை என்று நாம் தேடிக்கொண்டுபோய் அவர்களுக்குத் தனியாக இடம் ஒதுக்குவதற்கான நடவடிக்கையை நிச்சயமாக நம்மால் எடுக்க முடியாது. காரணம் அவர்கள் மருத்துவர்கள் ஆன பின்னாலே அவர்களுடைய குழந்தைகள் ஓரளவுக்கு மற்றவர்களுடைய குழந்தைகளோடு நல்ல நிலையிலே படிப்பதற்கான வாய்ப்பை அவர்கள் நிச்சயமாகப் பெறுகிறார்கள் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. எனவே, அதற்காக ஒரு தனி ஒதுக்கீட்டை செய்வோமானால் மற்றவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து நம்மை எல்லோரும் குறை சொல்லிவிடுவார்கள் என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இப்பொழுது மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டில் மிகச் சிலவே இருக்கிற காரணத்தால் இன்று மைனாரிட்டி இன் இன்ஸ்ட்டிட்யூசன் நடத்தக்கூடிய மருத்துவக் கல்லூரிகள் அந்த மைனாரிட்டி இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் முன்னுரிமை அளித்து அதிகமான மாணவர்களைச் சேர்க்கிறார்கள். மற்ற இனத்தவர்களுக்கு அங்கே இந்த சீட்டுகள் கொடுக்கப்படுவதில்லை. குறிப்பாக வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் பொதுவாக 90 சதவிகிதத்தை அவர்களே அனுபவித்து விடுவார்கள். அதில் 50 சதவிகிதத்தை மட்டும் அவர்களுக்கு அளித்துவிட்டு மீதி 50 சதகிவிதத்தை மற்ற மதத்தவர்களுக்கும் இனத்தவர்களுக்கும் பிரித்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இப்பொழுது ஒரே ஒரு கல்லூரி தான் இப்படி இருக்கிறது. மைனாரிட்டி ஆண்டில் நாம் தலையிட முடியாது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். எனவே, அநாவசியமாக பிரச்சினைகளை அதிலே கிளப்பாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 652 திரு. எஸ். சண்முகநாதன் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.